## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 131 of 2023 |
| Prosecution Witness | : | PW4 |

02.06.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : சந்திர சேகர் | Calling | : | கூலி |
| Father Name | : சங்கர் | Age | : | 35 |
| Village | : சிங்காளந்தபுரம் | | : | |
| Taluk | : துறையூர் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிங்காளந்தபுரத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தேதிமாதம் தற்போது ஞாபகம் இல்லை. காலிப்பட்டியில் உள்ள கந்தசாமி டைலர் கடைக்கு நானும் ரவி என்பவரும் சென்றிருந்தோம். அப்போது விபத்து நடந்த இடத்தை போலீசார் பார்வையிட்டு படம் வ்ரைந்து எழுதிக்கொண்டார்கள். அந்தபார்வை மகஜரில் நானும் ரவி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு

செய்யப்படுகிறது. பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகக்குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

போலீசார் தயாரித்து வைத்திருந்த தாளில் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று சொன்னால் சரிதான். என்னிடம் டைலர் கடையில் வைத்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள் என்று சொன்னால் இல்லை. விபத்து நடந்த இடத்தில் வைத்து கேட்டார்கள். விபத்து நடந்த இடம் எது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/–R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.